# ஹோட்டல் தொழிலாளர்களை ஆதரிப்பதற்கு பல இலட்சம் காரணங்கள் உள்ளன.




கடந்த காலத்தில் தொழிலாளர்களும் சமூக சேவையாளர்களும் ஒரு மகத்தான போராட்டத்தில் சேர்ந்துள்ளார்கள். இது வரலாற்றை உருவாக்குகிற செயல். இந்த வரலாற்றுக்குள் நடந்துள்ள ஒன்று: ரொறன்ரோவுக்கு வரும் ஒவ்வொரு தலைமுறையினரும் தங்களையும், தமது குடும்பங்களையும் சமூகங்களையும் முன்னேற்றுவதற்கு தேவைப்படுவது தொழிலாளர் சங்கங்கள் என்பதை கண்டு கொள்கிறார்கள். ஆனால் இன்றைய பொருளாதார நிலையில், கடந்த காலத்தில் தொழிற் சங்கங்களுக்கு ஊடாக போராடிப் பெற்ற நன்மைகளை அடையாளம் காட்ட முடியாதுள்ளது. இந்த தெளிவற்ற நிலை ஹோட்டல் தொழில் துறையில்தான் கூடுதலாக காணப்படுகிறது. இதற்கு காரணம் ஹோட்டல்களின் சொந்தம் மிக விரைவாக ஒன்று படுத்தப்பட்டமை. அத்துடன் ஹோட்டல் நிறுவனங்கள் உலக மயமாக்கப்பட்டமை.

தற்போது ஹோட்டல்களில் வேலை செய்யும் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கான மகத்தான போராட்டம் ஒன்று வட அமெரிக்கா முழுவதும் தொடங்கி உள்ளது. மிக நீண்ட காலமாக இவர்களது தொழில்கள் தரக்குறைவாக மதிக்கப்பட்டதுடன் குறைந்தளவு சம்பளமே இவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இன்றைய நிலையில் UNITE-HERE தொழிற்சங்கத்தின் Local 75 இல் சேர்ந்து ஹோட்டல் தொழிலாளர்களுக்கு உங்களது ஆதரவை வழங்குங்கள். அவர்கள் வேண்டி நிற்கும் உரிமைகளாவன:

- **முழு ஹோட்டல் தொழில் துறையில் உள்ளவர்களது சம்பளமும் நலன்களும் உயர்த்தப்பட வேண்டும்.**
- **கூடுதலான வேலைப்பழுவினால் தொழிலாளரகள் நோய் வாய்ப்படுவதினால், அவர்களது வேலைப்பழு குறைக்கப்பட வேண்டும்.**
- **இத்தொழிலாளர்களுக்கு மரியாதையான, நிரந்தரமான, தொழற்திறன் கொண்ட வேலைகள் எதிர்காலத்தில் கொடுக்கப்பட வேண்டும்.**

இந்த கோரிக்கைகளை வென்றெடுப்பதன் மூலமும் இவை சம்பந்தப்பட்ட தொழில் சங்க நடவடிக்கைளை ஒழுங்கு செய்வோருக்கு உதவுவதன் மூலம்தான் ஹோட்டல் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும். ஹோட்டல் தொழில்கள் தரமான தொழில்களாக உயர்த்தப்பட வேண்டும். இதைச் செய்வதற்கு உங்களுடைய உறுதியான ஒத்துழைப்பை நாங்கள் வேண்டி நிற்கிறோம்.

labourcouncil.ca • hotelworkersunited.org